Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000. விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :250 ஆடி 21ஆம் நாள் வியாழக்கிழமை 06 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

**பிரதிக்கு முந்துங்கள்**
தேர்தல் முடிவுகளுடன் உதயனின் விசேட மாலைப்பதிப்பு இன்று வெளிவரும். உதயன் விற்பனை முகவர்களிடம் பிரதிக்கு முந்துங்கள்

## லொக்கா நேற்று சுட்டுக் கொலை



அநுராதபுரம், ஓக. 6
கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த, பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த 04

## துண்டறிக்கை விநியோகித்த ஐவர் சிக்கினர்

முல்லைத்தீவு, ஓக. 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் வேட்பாளர்களது துண்டறிக்கைகளை விநியோகித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆதரவாளர்கள் 5 பேர் நேற்றுக் காலை கைது 04

## நாடு முழுவதும் 70 சதவீத வாக்களிப்பு

*தேசப்பிரிய தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 6
நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் நாடு முழுவதும் சராசரியாக 70 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுமாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

9 ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. ஜனநாயக ரீதிபாகவும், சுமுகமான முறையிலும் தேர்தல் நடைபெற்றுள்ளமை ஆணைக்குழுவுக்குக் கிடைத்த பெரு வெற்றி. சவால்க 04

## அங்கஜனின் துண்டறிக்கை வைத்திருந்தவர்கள் கைது



யாழ்ப்பாணம், ஓக. 6
நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதனின் துண்டறிக்கைகளை வைத்திருந்த மூவரைக் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

துண்டறிக்கையை விநியோகம் செய்வதற்காக வாகனத்தில் சென்று கொண்டிருந்த போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.5,106)

# ஆளப்போவது யார்? இன்று தெரியவரும்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 6
பொதுத்தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் நேற்று முழுமையாக நிறைவுபெற்றுள்ள நிலையில், வடக்கிலும் நாடளாவிய ரீதியிலும் யார் ஆட்சியைக் கைப்பற்றப்போகின்றார்கள் என்பது இன்று தெரியவரும். முன்னெப்போதும் இல்லாத வகையில் இம்முறை தேர்தலில் பலமுனைப் போட்டி நிலவியதால் ஆட்சியைக் கைப்பற்றுவது எவர் என்பதன் மட்டில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. 04



## வாக்களிப்பு நிலையங்கள் பாதுகாப்பானவை அதை உணர்த்தவே வாக்களிக்க வந்தேன்

***வாக்களித்த பின்னர் தேசப்பிரிய தெரிவிப்பு***

கொழும்பு, ஓக. 6
நான் பலமுறை வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றிருக்கின்றேன். 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் இம்முறைத் தேர்தலில் ஒரு வாக்காளனாக வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றிருக்கிறேன். எனக்கு 65 வயதானாலும், அது ஒரு பிரச்சினையல்ல. மாறாக வாக்களிப்பு நிலையங்கள் மிகவும் பாதுகாப்பானவையாகவே இருக்கின்றன. மக்கள் அச்சமின்றி தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண் 04

## வாக்களிக்கச் சென்ற 2 பெண்கள் மயக்கம்!

*மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்*

யாழ்ப்பாணம், ஓக. 6
நாடளாவிய ரீதியில் பொதுத்தேர்தல் நேற்று இடம்பெற்ற நிலையில், சுழிபுரத்திலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களிப்புக்காகச் சென்ற இரு பெண்கள் மயங்கி வீழ்ந்தனர்.

குறித்த பெண்கள் இருவரும், அங்கிருந்தவர்களின் உதவியுடன் நோயா 04

## மாகாண சபைத் தேர்தலுக்கு இந்த வருடம் வாய்ப்பில்லை!

*தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 6
தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக்காலம் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நிறைவுபெறும். ஆகவே மாகாண சபைத் தேர்தலை இவ்வருட இறுதியில் நடத்துவது சாத்திய மற்றது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேசிய தேர்தல் 04



## லெபனான் வெடிவிபத்தால் 300,000 பேருக்கு வீடில்லை!

பெய்ருட், ஓக. 6
லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்று இடம்பெற்ற வெடிவிபத்தால் சுமார் 3 லட்சம் பேர் வீடற்றவர்களாக ஆகியுள்ளனர் என்று லெபனான் அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் லெபனான் அரசு விடுத்துள்ள அறிவிப்பில், 'லெபனானையும் 04

## சாவகச்சேரியில் நேற்று வாக்களிப்பில் மோசடி!

*குழப்பம் தோன்றியதால் பரபரப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் சாவகச்சேரி தேர்தல் தொகுதி உட்பட்ட சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் வாக்களிக்கச் சென்ற, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளரின் கணவர் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அவரது வாக்கை ஏற்கனவே ஒருவர் பதிவு செய்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டது. பின்னர் 'கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டு' ஊடாக அவ 04

## வடக்கில் வாக்களிப்பு இம்முறை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6
கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்தில் வாக்களிப்பு வீதம் அதிகரித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் போது 72.31 சதவீதம் வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில், நேற்று நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 73.38 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 69.36 சதவீத வாக்குகளும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 77.4 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிப 04

# வேலைவாய்ப்புகள் வழங்கும் இடமாக நாட்டை மாற்றவேண்டும்

## வாக்களிப்பின் பின்னர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 6**

**வேலைவாய்ப்புகள் வழங்கும் இடமாக நாட்டை மாற்ற வேண்டும் என்பதே தங்கள் நோக்கம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை பொதுத்தேர்தலில் வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: அமைதியான முறையில் தேர்தலை நடத்தியுள்ளோம். இந்தத் தேர்தலில் எந்தவொரு வன்முறைச் சம்பவங்களோ கொலைகளோ பதிவாகவில்லை.

இதேவேளை, ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இணைந்துள்ளமையால் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 5 இடங்களைக் கைப்பற்றுவோம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டை அபிவிருத்திப் பாதையின் கீழ் நிச்சயம் கொண்டுச் செல்வார் என்று நம்புகின்றோம். மேலும் இந்தத் தேர்தலில் நாம் அவதானித்த முக்கிய விடயம் என்னவென்றால், மக்கள் திருட்டு, மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக அணிதிரண்டு வருகின்றனர்.



எனவே, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது தேர்தலில் வெற்றிபெறுபவர்களின் முக்கிய பொறுப்பாகும். என்றார். (து)

# வாக்களிக்கச் சென்றவர் குளவிகொட்டுக்கு ஆளானார்

கொழும்பு, ஓக. 6

வெலிமட குருத்தலாவ புனித தோமஸ் கல்லூரியிலுள்ள வாக்குச் சாவடியில் வாக்களிக்கச் சென்றிருந்தவருக்கு குளவி கொட்டியது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. குருத்தலாவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவரே குளவி கொட்டுக்கு ஆளானார் என்று போகாஹகும்புரா பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் வாக்களித்துவிட்டு, வீடு திரும்பிச் செல்லும் போதே குளவி கொட்டுக்கு ஆளானார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5)

# வாக்களிக்கச் சென்றவர் மாரடைப்பால் இறந்தார்

பாணந்துறை, ஓக. 6

வாக்களிக்கச் சென்ற ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, பெக்கமக பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ஓ.ரி3)

# தேர்தல் சட்டத்தில் திருத்தம் வேண்டும்

## கூறுகின்றது பவ்ரல் அமைப்பு



கொழும்பு, ஓக. 6

தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டம் இயற்றுவதற்காக நாடாளுமன்றத்துக்குச் செல்ல தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கே தற்போது நடைமுறையில் இருக்கும் தேர்தல் சட்டங்கள் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. வேட்பாளர்கள் தங்கள் விருப்பு இலக்கத்தைக் காட்சிப்படுத்த போதுமான சந்தர்ப்பங்கள் இல்லாமல் போயிருக்கின்றன.

கொரோனா தொற்று அச்சத்துக்கு மத்தியில் இந்த விடயங்களை கடந்த காலங்களிலும் பார்க்க தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

அத்துடன் தேர்தல் சட்டங்கள் மிகவும் இறுக்கமாக இருக்கின்றமையால் வசதி குறைந்த வேட்பாளர்களுக்கு ஒருசில சந்தர்ப்பங்களில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

வசதி படைத்தவர்கள் கோடிக்கணக்கில் செலவழித்து ஊடகங்கள் ஊடாகவும் வேறு வழிகளிலும் தங்களை மக்கள் மத்தியில் அடையாளப்படுத்த முடியுமாக இருந்தபோதும் வசதி குறைந்த வர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. அதனால் வேட்பாளர்களுக்கு மத்தியில் சமமான பரப்புரை வாய்ப்பு இருக்கவில்லை.

அதேபோன்று, இந்த முறை தேர்தல் சட்டமீறல்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாகவே அதிகம் இடம்பெற்றிருக்கின்றன.

குறிப்பாக 4ஆயிரத்து 400 முறைப்பாடுகள் முகப்புத்தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் சமூக வலைத்தலங்களைக் கண்காணிக்கும் வகையில் புதிய சட்டம் ஏற்படுத்தப்படவேண்டும்.

அதேபோன்று வேட்பாளர் ஒருவர் எந்தளவு தொகை செலவழிக்காலாம் என்ற கட்டுப்பாடு இருக்கவேண்டும். இதன் மூலமே கோடிக்காணக்கான ரூபாக்கள் வீணாகுவதைக் கட்டுப்படுத்த முடியும். அதனால் 9 ஆவது நாடாளுமன்றம் தற்போது நடைமுறையில் இருக்கும் தேர்தல் சட்டத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# சமூக வலைத்தளங்களில் எதையும் பதிவேற்றாதீர்கள்

## தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஓக. 6

பொதுத்தேர்தலில் வாக்களிப்பதை யாராவது ஒளிப்படம் எடுத்திருந்தால் அல்லது காணொலியாக பதிவுசெய்திருந்தால் அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுவதைத் தவிர்க்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நேற்று விடுத்த அறிக்கையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேஷப்பிரிய இவ்வாறு கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில், வாக்களிப்பதனை ஒளிப்படம் எடுத்தல் மற்றும் காணொலி பதிவுசெய்தமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை தவிர்க்குமாறு சமூகவலைத்தள பாவனையாளர்கள் மற்றும் நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுதல் தேர்தல் சட்டமீறல் என்றும் அதனால் இத்தகைய செயற்பாடுகளைத் தவிர்க்குமாறும் அவர் கோரியுள்ளார். (து)

# பெரும்பான்மை பெறுவோம் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 6

இந்தத் தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 5 வருடங்களுக்கு யார் ஆட்சிமைக்கப் போகிறார்கள் என்பதற்கு மக்கள் ஆணை வழங்கும் தினம் இன்று (நேற்று). பெரும்பாலான மக்கள் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் அதிகூடிய வாக்குகளால் நாம் பெரு வெற்றியடைவோம். பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று மேலும் தெரிவித்தார். (து)

## யாழ்ப்பாண நிர்வாக மாவட்ட வாக்களிப்பு விவரம் - 2020

| வாக்களிப்பு தொகுதி | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை | வாக்களித்தோர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 22,811 | 16,944 | 74.28% |
| வட்டுக்கோட்டை | 48,611 | 34,207 | 70.37% |
| காங்கேசன்துறை | 61,727 | 29,953 | 48.52% |
| மானிப்பாய் | 55,827 | 38,969 | 69.80% |
| கோப்பாய் | 58,917 | 38,934 | 66.08% |
| உடுப்பிட்டி | 39,270 | 25,350 | 64.55% |
| பருத்தித்துறை | 37,105 | 25,865 | 69.71% |
| சாவகச்சேரி | 52,713 | 35,005 | 66.41% |
| நல்லூர் | 47,478 | 33,548 | 70.66% |
| யாழ்ப்பாணம் | 33,886 | 25,166 | 74.27% |
| உபமொத்தம் | 458,345 | 303,941 | 66.31% |
| தபால்மூல வாக்கு | 21,239 | 20,829 | 98.07% |
| மொத்தம் | 479,584 | 324,770 | 67.72% |

# இருவருக்கு மட்டும் வாக்களிப்பு நிலையம்

**கொழும்பு, ஒக.6**

**2020 நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்காக மட்டக்களப்பில் இருவர் வாக்குகளைப் பதிவு செய்யும் வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டு வாக்களிப்பு நடைபெற்றது.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருவர் வாக்களிக்கும் நிலையமாகக் கருதப்படும் மாந்தீவு தொழுநோயாளர் மருத்துவமனைக்கு நேற்றுக் காலை வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டன.
மட்டக்களப்பில் இருந்து படகு மூலம் வாக்குப்பெட்டிகளும், வாக்குச்சீட்டுகளும் கொண்டு செல்லப்பட்டன.
இரண்டு வாக்காளர்களாக உள்ள தொழு நோயாளர்கள் வாக்களிப்பதற்காக பத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகளும், பொலிஸாரும் அங்கு கடமைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (க)



## தாக்குதலில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஒக. 6
தாக்குதலுக்கு இலக்கான 56 வயது தந்தையும், 32 வயது மகனும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கிராம்புவில் பகுதியில் இடம்பெற்றது.
தாக்குதலில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-9)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்


சாவகச்சேரி, ஒக.6
மோட்டார் சைக்கிளும், ஓட்டோவும் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது.
மந்துவில் மேற்கைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே விபத்தில் காயமடைந்தார்.
இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)



## பளைப் பிரதேசத்தில் ரம்புட்டான் செய்கை

கிளிநொச்சி, ஒக. 6
கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட மாசார் கிராமத்தில் ரம்புட்டான் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளது.
குறித்த பிரதேசத்தில் வசித்து வரும் அருள்செல்வம் என்ற விவசாயி தனது மனைவி கடையில் வாங்கி வந்த ரம்புட்டான் பழத்தின் விதையினை பயிரிட்டுள்ளார்.
சுமார் மூன்று வருடங்களுக்குப் பின்னர் அவருக்கு ரம்புட்டான் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளது.
இதற்கு அவரது விடாமுயற்சியே முக்கிய காரணமாக காணப்பட்டது.
ரம்புட்டான் பயிர்ச்செய்கை பளை மண்ணில் பயிரிடலாம் என்பதனை இந்த விவசாயி நிரூபித்துக் காட்டியுள்ளார். (ஐ-113)

## வாக்களிப்பு நிலையத்தில் குழப்பம் விளைவித்தவர் கைது



கொழும்பு,ஒக.6
வாக்களிப்பு நிலையத்துக்கு அருகில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மினுவாங்கொட போரகொடவத்த பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டார்.
தேர்தல் வாக்களிப்பு மத்திய நிலைய கடமைகளில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மற்றும் வாக்களிப்பதற்காக வருகை தந்த மக்களிடம் குறித்த நபர் குழப்பம் ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டமை காரணமாக கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர், பொரகொடவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், இவரை மினுவாங்கொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மினுவாங்கொட பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## லொறியுடன் மோதி மோ.சைக்கிள் விபத்து

கிளிநொச்சி, ஒக.6
லொறியும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகின. அதில் மோட்டார் சைக்கிள் சாரதி படுகாயமடைந்துள்ளார்.
இந்த விபத்து கிளிநொச்சி, முரசுமோட்டை பகுதியில் நேற்று நடந்துள்ளது.
தர்மபுரத்தைச் சேர்ந்த இளைஞன் விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.
மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## இலங்கை யுவதி பிரான்ஸில் உயிரிழப்பு

பிரான்ஸ், ஒக.6
பிரான்ஸ் நாட்டில் இலங்கையை பூர்வீகமாக கொண்ட பல்கலைக்கழக மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் சக நண்பிகளுடன் நீராடச் சென்றவேளையே நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியை பூர்வீகமாகக் கொண்ட இரஞ்சன் அனித்திரா (வயது 19 ) என்ற மாணவியை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நுணாவில் மேற்கில் உரமானியப் பதிவு

நுணாவில், ஒக. 6
நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பின் உரமானியப் பதிவு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நுணாவில் மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.
இவ் எல்லைக்குட்பட்ட விவசாயிகள் அடையாள அட்டை, ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு, சந்தா கட்டிய பற்றுச்சீட்டுடன் வருகைதருமாறு சாவகச்சேரி நுணாவில் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)

## மக்கள் நலன்களுக்கு மட்டுமே முன்னுரிமை

### பசில் உறுதி



கொழும்பு, ஒக. 6
மக்களின் ஆதரவில் பொதுஜன பெரமுனவின் தலைமையில் அரசு உருவாக்கப்படும் போது மக்களின் நலன்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.
நேற்று தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,
வரலாற்றில் முதல் தடவையாக சிறந்த அரசியல் கட்சியொன்று உருவாக்கப்பட்டது.
இந்தக் கட்சி குறுகிய காலத்திலேயே மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தமை இலங்கை வரலாற்றில் முக்கிய விடயமாகும்.
மக்களின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட எமது கட்சி நடைபெறுகின்ற தேர்தலில் வெற்றியடைந்து ஆட்சியமைத்தால் , மக்களின் நலன்களுக்கு மாத்திரமே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். என்றார்.(க)

கொரோனா பெருந்தொற்றுக்குள்ளும்

# பொதுத் தேர்தலை நடத்திய தெற்காசிய நாடு இலங்கை

கொழும்பு, ஓக. 6

கொரோனா தொற்று உலகில் காணப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தலை நடத்திய தெற்காசியாவின் முதலாவது நாடாக இலங்கை உள்ளதாக ஜனாதிபதி கோத்தாபய ராபஜக்ச தெரிவித்துள்ளார்.



பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு முறை மீது வைத்த நம்பிக்கைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் அவர் இவ்வாறு நன்றி தெரிவித்து பதிவிட்டுள்ளார். (ம)

## ஆளப்போவது...

இலங்கையின் 9ஆவது பொதுத்தேர்தல் நேற்று நாடளாவிய ரீதியில் சுமுகமாக இடம்பெற்றது. கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் மக்கள் வாக்களிப்பில் ஈடுபாடு காட்டுவார்களா என்பதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டபோதிலும் சில இடங்களில் கடந்த முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலைப் போன்றும் இன்னும் சில இடங்களில் கடந்த முறையை விடவும் அதிகமாக மக்கள் வாக்களித்தனர். சுகாதார நடைமுறைகளான மாஸ்க், பிரத்தியேகப் பேனா, சமூக இடைவெளி ஆகிய நடைமுறைகளைப் பெருமளவான மக்கள் பின்பற்றினார்கள்.

வாக்குகளை எண்ணும் பணிகள் இன்று காலை ஆரம்பிக்கின்றன. இன்று இரவுக்குள் எவர் ஆட்சியைக் கைப்பற்றப் போவது என்பது தொடர்பான முடிவுகள் தெரியவரும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வடக்கைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுக்கு இடையில் மும்முனைப் போட்டி நிலவுகின்றனது. வாக்குகள் கணிசமான அளவு பிளவடையும் என்பதால் வடக்கின் அரசியல் களம் பரபரப்பாகவே உள்ளது.

அதேபோன்று தேசிய ரீதியில் இம்முறை பொதுமக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கு இடையில் பெரும் போட்டி நிலவக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இணைந்து செயற்படும் வகையில் தமக்கு வாக்குகளை வழங்குமாறு பொதுமக்கள் முன்னணி தனது தேர்தல் பரப்புரையை மேற்கொண்டது. 19ஆவது திருத்தத்தை இல்லாமல் ஆக்குவதற்கும் வலுவான அரசை அமைப்பதற்கும் தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குமாறும் அந்தக் கட்சி கேட்டிருந்தது. எனினும் பெரமுனவுக்கு எதிராக சஜித் தலைமையில் பல கட்சிகள் இணைந்து மெகா கூட்டணி அமைத்திருந்தன. இதனால் இம்முறை பொதுத் தேர்தல் தேசிய அரங்கிலும் இன்றையதினம் மிகப்பெரும் எதிர்பார்ப்புக்கு உரிய தொன்றாக மாறியுள்ளது. (ம)

## வாக்களிப்பு...

டும் என்பதை வலியுறுத்தும் விதமாக இம்முறை நானும் வாக்களித்திருக்கிறேன் என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்காக நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றிருக்கின்றேன். எனினும் 2011ஆம் ஆண்டின் பின்னர் ஒரு வாக்காளராக வாக்களிப்பு நிலையத்துக்கு இன்றையதினம்தான் (நேற்று) சென்றேன். ஏனெனில் எனக்கு 65 வயதாகினாலும், வயது ஒரு பிரச்சினையல்ல. வாக்களிப்பு நிலையங்கள் மிகவும் பாதுகாப்பானவையாகவே இருக்கின்றன. ஆகவே அச்சமின்றி தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும் என்று மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியிருந்தது. அனைத்து இளைஞர்களும் நிச்சயமாக வாக்களிக்க வேண்டும். தமது பெற்றோர், சகோதர, சகோதரிகளையும் வாக்களிக்குமாறு வலியுறுத்தவேண்டும். வயது முதிர்ந்தவர்களை வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்து வாருங்கள். வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்ட, 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு பிரஜையும் 'வாக்களித்தல்' என்ற தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்த முடியும். உங்களுடைய வாக்கு என்பது உங்கள் உரிமை, உங்கள் குரல் மற்றும் உங்களுடைய எதிர்காலமாகும். அதனைத் தவறாது பயன்படுத்துவது அவசியம் - என்றார். (ஒ.5)

## சாவகச்சேரியில்...

ருக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று காலையிலிருந்து சுமுகமாக இடம்பெற்று வருகின்றது.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு வாக்களிப்பதற்கு, சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனின் கணவர் இராமநாதன் நேற்று மதியம் சென்றுள்ளார். இதன்போது அவரது வாக்கு ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்த அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தான் வாக்களிக்க வரவில்லை என்றும் இப்போதுதான் வாக்களிக்க வந்துள்ளதாகவும் இராமநாதன் தெரிவித்துள்ளார். இதனால் அங்கு சிறிது குழப்பம் ஏற்பட்டது. இது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் கி.அமல்ராஜ்ஜின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அவர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆராய்ந்தார்.

'வாக்களிப்பு நிலையத்திலிருந்த கட்சி முகவர்களோ, கண்காணிப்பாளர்களோ வாக்குச் சாவடியில் ஆள் மாறாட்டம் இடம்பெற்றதாக எந்தவொரு ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. எனவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் நபர் ஒருவர் வாக்களிக்கக் கோரும்போது அவருக்கு சட்டப்படி, 'கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டு' வழங்கப்படும். அவருக்கும் வழங்கப்பட்டு அவர் வாக்களித்தார்' என்று அமல்ராஜ் குறிப்பிட்டார். (ஒ.5,159)

## லெபனான்...

அதன் தலைநகர் பெய்ரூட்டையும் இந்த வெடிப்பு பெரிதும் பாதித்து சொல்லொணா துயரத்தைத் தந்துள்ளது. 2 ஆயிரத்து 750 கிலோ யுரேனியத்தை பாதுகாப்பற்ற முறையில் கையாண்டவர்கள் உச்சக்கட்டத் தண்டனையை அனுபவிப்பார்கள். இந்தப் பெரும் வெடிப்பால் சுமார் 3 லட்சம் மக்கள் வீடற்றவர்களாக ஆகியுள்ளனர். 40 ஆண்டுகால பொருளாதாரப் பின்னகர்வை பெய்ரூட் சந்திக்கும்' என்றுள்ளது. (ம)

## வாக்களிக்கச்...

ளர் காவு வண்டி மூலமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-27)

## வடக்கில்...

தித் தேர்தலில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 66.58 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 67.2 சதவீதமாக அது அதிகரித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலின் போது 73.19 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில் நேற்றைய நாடாளுமன்றத் தேர்தலில் 71.52 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட வவுனியா நிர்வாக மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலின் போது 75.12 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் 76.48 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. மன்னார் மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலின் போது 71.7 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில் நேற்றைய நாடாளுமன்றத் தேர்தலில் 79.49 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலின் போது 76.2 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தலின் போதும் 76.2 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 74 சதவீத வாக்குப் பதிவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 76 சதவீத வாக்குப் பதிவும், அம்பாறை மாவட்டத்தில் 73 சதவீத வாக்குப் பதிவும் இடம்பெற்றுள்ளன. (ஒ.5)

## மாகாண...

கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடும். புதிய நாடாளுமன்றம் கூடியவுடன் முன்னெடுக்க வேண்டிய முக்கிய விடயங்களுக்கு இம்மாதம் முழுவதும் சென்று விடும். மாகாணசபை தேர்தல் நடத்தும்போது பல சட்டச் சிக்கல்கள் தேர்தல் திருத்த முறைமையின் ஊடாக ஏற்படும். இவ்வாறான நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக்காலம் நவம்பர் மாதம் 14ஆம் திகதியுடன் நிறைவுபெறும். ஆகவே தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல் மாகாண சபைத் தேர்தலை வருட இறுதியில் ஒருபோதும் நடத்த முடியாது - என்றார். (ம)

## நாடு...

ளுக்கு மத்தியில் இந்த வெற்றியை அடைந்துள்ளோம்.

காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையில் தேர்தலில் நாடு முழுவதும் சராசரியாக 80 சதவீத வாக்குப்பதிவு இடம்பெறும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் 70 சதவீத வாக்குப்பதிவாகியுள்ளது என்பது மகிழ்வுக்குரியது.

நுவரெலியா மாவட்டத்தில் 75 வீத வாக்குப்பதிவும், குருணாகல், காலி, புத்தளம், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் 60 தொடக்கம் 70 சதவீதத்துக்கும் இடைப்பட்ட வாக்குகளும் பதிவாகியுள்ளன. ஏனை மாவட்டங்களில் 70 தொடக்கம் 75 வரையான சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

வாக்குகள் எண்ணும் பணிகள் நாளை (இன்று) காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்படும். பிரதான தேர்தல் முடிவுகளை நாளை (இன்று) நள்ளிரவுக்குப் பிறகு வெளியிட எதிபார்த்துள்ளோம். எவ்வாறாயினும் 7 ஆம் திகதி காலை 6 மணிக்குள் தேர்தல்முடிவுகள் வெளியிடப்படும். விருப்பு வாக்குகளின் பெறுபேறுகள் 7 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் வெளியிடப்படும். தேர்தல் பெறுபேறு, விருப்பு வாக்கு பெறுபேறு ஆகியவற்றுக்கான வர்த்தமானி 8 ஆம் திகதி வெளியிடப்படும். தேசிய பட்டியல் தொடர்பான வர்த்தமானி 9 ஆம் திகதி வெளியிடப்படும். தேர்தல்கள் தொடர்பான அனைத்து வர்த்தமானியும் 10 ஆம் திகதி வெளியிடப்படும்- என்றார். (த)

## லொக்கா...

எஸ்.எவ்.லொக்கா எனப்படும் இரோன் ரணசிங்க நேற்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

அநுராதபுர தஹியாகம பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார். துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த எஸ்.எவ்.லொக்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு இரவு விடுதி ஒன்றில் வைத்து கராத்தே சம்பியனான வசந்தசொய்சா கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபராக லொக்கா உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.5)

## துண்டறிக்கை...

செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் சுயேச்சைக்குழு வேட்பாளரின் துண்டறிக்கைகளை விநியோகித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து ஒரு தொகை துண்டறிக்கைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை முள்ளியவளை கணுக்கேணிப் பகுதியில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் துண்டறிக்கைகளை வாகனத்தில் கொண்டு சென்று விநியோகித்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களது வாகனமும், அதில் இருந்து பெருமளவான துண்டறிக்கைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் மூவரும் முள்ளியவளை பொலிஸாரால், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ.5,19)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தேர்தல் வாக்களிப்பும் எதிர்பார்ப்புக்களும்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் வாக்களிப்புகள் நேற்று மாலை ஐந்து மணியுடன் நிறைவு பெற்றுவிட்டன. இன்று நண்பகலுடன் கட்சிகள் பெற்றுள்ள ஆசனங்களின் விபரங்கள் வெளிவருமெனவும், முன்னிரவுப்பொழுதில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலும் வெளியிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

காலை நேரம் வாக்களிப்பு ஆரம்பித்தபோது, பல இடங்களிலும் சுறுசுறுப்பாக ஆரம்பித்த வாக்குப்பதிவு நண்பகல் அளவில் சற்று மந்தமடைந்திருந்தது. எனினும் பிற்பகலில் மீண்டும் சுறுசுறுப்பாக வாக்குப்பதிவு இடம்பெறுமென அரசியல் கட்சிகளினால் எதிர்பார்க்கப்பட்டது.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக கடந்த தேர்தலில் இருந்த ஆதரவுப் போக்கில் இம்முறை சற்றுப் பின்னடைவு காணப்படுவதாகவே தோன்றுகிறது. அதேவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக தமிழ்த் தேசியத்தைப் பேசிக்கொண்டு மாற்று அணி எனத் தம்மைக் கூறியவாறு களமிறங்கிய கட்சிகள் தொடர்பாகவும் தமிழ் மக்களுக்கு திருப்திகரமான கருத்துகள் இருக்கவில்லை. அவர்கள் வெறும் தீவிரமான கோசங்களை முன்வைத்ததைத் தவிர உருப்படியான மக்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. மக்கள் மத்தியில் இறங்காமல் ஒரு விதக் கனவான் அரசியல் மூலம் ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்க முடியுமென்ற நம்பிக்கையுடன் களமிறங்கியுள்ளனர். ஆனால் இந்த அறிக்கை வீரர்களை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லைப் போலவே தோன்றுகிறது.

இன்னொரு புறம், அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் எதிர்க் கட்சியின் ஆதரவாளர்களும் இங்கு வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளனர். ஆட்சியிலுள்ள ராஜபக்ச சகோதரர்கள் இனவாத ஒடுக்குமுறையையே தங்கள் கொள்கையாக கொண்டிருப்பதால் தமிழ் மக்களின் ஆதரவை அவர்கள் பெறுவது சாத்தியமாக இருக்கப்போவதில்லை. அதேபோன்று 2015 தொடக்கம் ஆட்சியிலிருந்த தற்போதைய எதிர்க் கட்சியினரும் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகவோ, மக்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகளை நீக்குவது தொடர்பாகவோ ஆக்கபூர்வமான, முழுமையான எந்த நடவடிக்கையுமே நிறைவேற்றாத நிலையில் அவர்கள் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.

இப்படியான நிலையில் வடக்கு கிழக்கு மக்களிடையே தற்சமயம் இடம்பெற்று முடிந்த தேர்தல் தொடர்பாக ஒரு நம்பிக்கையீனமும் சலிப்பும் இருந்து வந்தது உண்மைதான் . ஆனாலும் தேர்தல் நெருங்க நெருங்க தமிழ் மக்கள் தொடர்பான உண்மையான அக்கறை கொண்ட பிரதிநிதிகளை தெரிவுசெய்ய வேண்டுமென்ற கருத்து மெல்ல மெல்ல வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அதன் காரணமாக சலிப்பும் அக்கறையும் கலந்த ஒரு விசித்திரமான மனநிலையுடன் எமது மக்கள் தேர்தலை எதிர்கொண்டனர்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச நாட்டின் அதிபராக உள்ள நிலையில், நாடாளுமன்ற அதிகாரமும் தங்கள் கையில் வர வேண்டும் என்றும், அரசமைப்பை மாற்றும் வகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்க வேண்டுமெனவும் இரு நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு பொதுசன முன்னணியினர் களத்திலிறங்கியுள்ளனர்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், பொதுசன முன்னணியினர் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் மேலும் அதிகரிக்குமெனவும், ஏற்கனவே இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியையோ நிவாரணத்தையோ பெற்றுக்கொள்ள முடியாது எனவும் திட்டவட்டமாக நம்புகின்றனர். எனவே அவர்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் மட்டுமின்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறக்கூடாது என்பதிலும் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர்.

ஆனால் கொழும்பில் ஆட்சியிலிருப்பவர்கள் யாரென்பதைத் தீர்மானிக்கும் சக்தி தமிழ் மக்களிடம் இல்லையென்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். எனவே சிங்கள மக்களின் வாக்களிப்பேமத்தியில்யார்ஆட்சியில்இருப்பதென்பதைத்தீர்மானிக்கும்.

எனவே தமிழ் மக்களின் தெரிவு எவர் ஆட்சியிலிருந்தாலும் நேர்மையுடனும் துணிவுடனும் எமது உரிமைகளுக்காக உறுதியுடன் போராடக்கூடிய சக்திகளை எமது பிரதிநிதிகளாக ஆக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். அப்படியான ஒரு தேர்வின் மூலமே ஒரு நல்ல கொள்கைப் பற்றுள்ள, எதிரிகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளைச் சரியாகக் கையாண்டு எமது உரிமைகளைப் பெறும் வகையிலான தேசிய ரீதியிலும் சர்வதேச அளவிலும் இராஜ தந்திர அடிப்படையில் பிரச்சினைகளை முன்னெடுக்கக் கூடிய ஒரு தலைமையை உருவாக்க முடியும்.

# கடுமையான தேர்தல் மீறல்கள் இதுவரை பதிவாகவில்லை

### பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.6

கடுமையான தேர்தல் சட்ட மீறல்கள் எந்ததொரு பகுதிகளிலும் இதுவரை பதிவாகவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி.ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று முற்பகல் தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'தேர்தல் நடைபெறும் வாக்களிப்பு நிலையங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே பாதுகாப்பு பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக சம்பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை.

மக்களும் அமைதியான முறையில் எந்தவொரு இடையூறும் இன்றி வாக்களித்தனர் என்றார்". (ஐ)

## 3 வாக்குச்சாவடிகளில் மீண்டும் வாக்கெடுப்பு?

கொழும்பு,ஓக. 6

நிக்கவரெட்டியவில் உள்ள இரண்டு வாக்குச் சாவடிகளிலும், கொபெய்கனவில் உள்ள ஒரு வாக்குச்சாவடியிலும் மறு வாக்கெடுப்பு நடத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மூன்று வாக்குச்சாவடிகளுக்கும் பிரதமரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளருமான மஹிந்த ராஜபக் ஷ தனது ஆதரவாளர்களுடன் நுழைந்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

வாக்குப்பதிவின் போது, மஹிந்த ராஜபக்ஷ 100 வாக்காளர்களுடன் மூன்று வாக்குச் சாவடிகளுக்குள்ளும் நுழைந்தார் எனக் கூறப்படுகிறது.

எனவே இந்தச் சம்பவம் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பை அப்பட்டமாக குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது.

அத்தகைய வேட்பாளர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும். அவ்வாறு செய்யத் தவறினால், அந்த வாக்குச் சாவடிகளில் மறு வாக்கெடுப்பை நடத்தும் நாளை ஒதுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷ அங்கீகரிக்கப்படாத ஏராளமான ஆதரவாளர்கள் மற்றும் வாகனங்களுடன் நிக்கவரெட்டிய பகுதியில் பயணித்தார் என தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையமும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதேவேளை மகாசென் தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு வாக்குச்சாவடிகளுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வருகை தந்தார் என்றும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையமும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## தபால்மூல வாக்கின் பெறுபேறுகள் நண்பகல் வெளியாகும்

கொழும்பு, ஓக.6

பொதுத்தேர்தலில் தபால்மூலம் வாக்குகள் எண்ணும் பணி இன்று காலை 7 மணி தொடக்கம் 8.00 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

66 மத்திய நிலையங்களில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தபால்மூல வாக்களிப்பின் தொகுதி மட்டத்திலான முதலாவது உத்தியோகபூர்வ பெறுபேற்றை இன்று நண்பகல் 12.00 மணிக்கு பின்னர் வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இறுதி தேர்தல் பெறுபேறுகள் இன்று நள்ளிரவுக்கு முன்னர் வழங்கக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஐ)

## வீதிகளில் வீசப்பட்ட துண்டுப்பிரசுரங்கள்

சாவகச்சேரி ஓக. 6.

நாடாளுமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்ற நிலையில் மக்கள் வாக்களிக்கச் செல்லும் வீதிகளில் பெருமளவான தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டிருந்தன. அவை இரவிரவாக வாகனங்களில் கொண்டு வரப்பட்டு வீசப்பட்டிருக்கலாமென மக்கள் தெரிவித்தனர். (ஐ-9)

# மதுபோதையில் தேர்தல் கடமை; பொலிஸ் இன்ஸ்பெக்டர் பணி நீக்கம்

கொழும்பு,ஓக. 6

மது போதையில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், உடன் அமுலுக்கு வரும் வகையில், பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வாக்கு எண்ணும் மத்திய நிலையமாகப் பெயரிடப்பட்டுள்ள வெயாங்கொட பத்தலகெதர பகுதியில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரியொருவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட, வெயாங்கொடப் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஒருவரே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்புடைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் வத்துபிட்டிவல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மருத்துவப் பரிசோதனை செய்தபோது, அவர் மதுபோதையில் இருந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



## இன்றைய நாள்

**மேடம்:** தலைமை அதிகாரிகளின் நம்பிக்கையை பெறும் நாள். பெண்கள் முயற்சியில் வெற்றி காண்பர். உறவினர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். செலவுக்கேற்ற வரவு வரும்.

**இடபம்:** பணியிடப் பிரச்னைகளின் காரணத்தைகண்டறியும்நாள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பலநாள் போட்ட திட்டம் நிறைவேறும். உறவினர் உதவுவர். கடந்த சில நாட்கள் இருந்த கலக்கம் நீங்கும்.

**மிதுனம்:** வேலைகளை விரைந்து முடிக்கும் நாள். புதிய பாதையில் செல்வீர்கள். மேலதிகாரியிடம் பாராட்டுப் பெறுவீர்கள். குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும்.

**கடகம்:** மிகவும் யோசித்து முடிவெடுக்க வேண்டிய நாள். முன்கோபத்தைக் குறையுங்கள். வியாபாரத்தில் வரவு சுமார்தான். பணியிடத்தில் நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிவரும்.

**சிம்மம்:** வெற்றி பெறும் நாள். தாயாரின் உடல் நிலை சீராகும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் லாபம் வரும். வாகன வசதி பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டு.

**கன்னி:** உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டிய நாள். வீடு கட்டும் திட்டம் தள்ளிப் போகக்கூடும். புதிய வேலைக்கான முயற்சியில் முன்னேற்றம் உண்டு. வாகன வசதி பெருகும்.

**துலாம்:** தொழில் செய்வோருக்குச் சிறு பற்றாக் குறைகள் ஏற்படும் நாள். பணியாளர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். முயற்சிகள் வெற்றியடையும்.

**விருச்சிகம்:** பிறரின் குறைகளை தீர்த்து வாழ்த்து பெறும் நாள். சில பேச்சு வார்த்தைகள் நல்ல முடிவிற்கு வரும். பண வரவு சற்றே திருப்தி தரும்.

**தனுசு:** அலுவலகப் பணிகளைத் திறம்பட செய்து முடிக்கும் நாள். தேவையற்ற வகைகளில் நேரம் வீணாகும். பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உடல் நலம் சீராகும் நாள். குடும்பத்தில் மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும். திற மையான நிர்வாகத்தினால் நல்ல பெயரைப் பெறுவீர்கள்.

**கும்பம்:** முயற்சிக்குரிய பலன் நிறைவாய்க் கிடைக்கும் நாள். கலைத்துறையினர் முன்னேற்ற பாதையில் அடியெடுத்து வைப்பர்.

**மீனம்:** தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றமான நாள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும். வெளிநாடுகளில் வசிக்கும் உறவினரிடமிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

# மந்த கதியில் வாக்களிப்பு

## கபே அமைப்பு தகவல்

கொழும்பு,ஓக.6

முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது, இந்தத் தேர்தலின் வாக்களிப்பு நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற்றன என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீம் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் வன்முறைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வாக்களிப்பு நடவடிக்கை ஆரம்பமானது முதல் இதுவரை 67 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அவற்றில் அதிகமான முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பானவை. திகாமடுல்ல மாவட்டத்தின் அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பகுதிகளில் 4 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அதேவேளை பொதுத் தேர்தலை கண்காணிக்க கபே அமைப்பின் சார்பில் 2 ஆயிரத்து 200 கண்காணிப்பாளர்கள் சேவையில் ஈடுபட்டனர் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (க)

## மஜாஜ் நிலையங்கள் சுற்றிவளைப்பு

### 13 பேர் கைது

தம்புள்ளை, ஓக.6

தம்புள்ளை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில், கொரோனா காரணமாக தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி தம்புள்ளை இமானுவ பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வந்த இரண்டு மஜாஜ் நிலையங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, அங்கு பணிபுரிந்த 9 பெண்கள் மற்றும் 4 ஆண்கள் ஆகியோரை அந்தந்த மஜாஜ் நிலையங்களிலேயே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த காலங்களில் இந் நிலையங்களுக்கு வந்து சென்றவர்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்று அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுப்ப தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ரி3)

## முல்லைத்தீவை சேர்ந்தவர் கனடாவில் சடலமாக மீட்பு

கொழும்பு,ஓக.6

கனடாவில் வசித்து வந்த இலங்கையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் கடந்த வியாழக்கிழமை எரிபொருள் நிலையத்துக்கு அருகில் அவருடைய காரில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பாலித தெவரப்பெரும பொலிஸாருடன் முறுகல்

கொழும்பு,ஓக.6

மத்துகம பிரதேசத்தில் பொலிஸாருக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவருக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தனது ஆதரவாளர்களுடன் வாக்களிப்பதற்காக வாகனப் பேரணியாகச் சென்றுள்ளார். அவர்களது வாகனப் பேரணியை பொலிஸார் இடைமறித்தமையால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. சிறிதுநேரம் பொலிஸாருக்கும், தெவரப்பெருமவுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் மூண்டது. பொலிஸார் அங்கிருந்து கலைந்து செல்ல முற்படுகையில் நடுவீதியில் நிறுத்தியிருந்த தனது ஜீவ் வண்டியின் மேல் ஏறிய பாலித தெவரப்பெரும பொலிஸாருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## குணமடைந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 537 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஓக.6

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 537 ஆக அதிகரித்துள்ளது எனத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. நேற்றைய தினம் 13 பேர் குணமடைந்து வீடு திரும்பியதையடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 834 ஆக பதிவாகியுள்ளது. அவர்களில் 2 ஆயிரத்து 537 பேர் குணமடைந்துள்ள நிலையில் வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 286 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருவதுடன், அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதேநேரம் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் 68 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த தொற்றுக் காரணமாக இலங்கையில் இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ரி1)



## நல்லூர் உற்சவ காலத்தில்

# மாணவர்கள் இடையே நூலறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 6

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், பாடசாலை மாணவர்களிடையே அருகி வரும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் நோக்கில், மாணவர்களிடையே சமய நூல்களை வாசிக்கும் பழக்கத்தையும் தேடிக் கற்கும் ஆற்றலையும் மேம்படுத்துவதற்காக நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு 'நூலறிவுப் போட்டி - 2020' எனும் போட்டி நிகழ்வினை முன்னெடுத்து வருகிறது. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், முதல் தொகுதியாக வெளியீடு செய்த நூல்களில் சேக்கிழார் நாயனார் சரித்திரம், திருநாவுக்கரசு நாயனார் புராணம், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், சுந்தரமூர்த்தி நாயனார் புராணம், நித்திய கரும விதி, சிவாலய தரிசன விதி, புட்ப விதி, சிவபூசைத் திரட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அருளிய நீதி வாக்கியங்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி, நாவலர் கவித்திரட்டு, நன்னெறிக் கட்டுரைகள், கந்தபுராண வசனம் ஆகியவை உள்ளடங்குகின்றன. நூறு வினாக்களைக் கொண்ட இந் நூலறிவுப் போட்டியில் வினாத்தாளில் பெரும்பாலான வினாக்களை இம் முதல் தொகுதிக்குள் உள்ளடக்கி, மாணவர்களை இத்தகைய நூல்களின் மீதான வாசிப்பில் அக்கறைகொள்ளச் செய்யும் வகையில் அமையவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பத்தாயிரம் வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்ட நிலையில், நாடளாவிய ரீதியில் http://www.hindudept.gov.lk/web/images/pdf/noolarivuppoddi2020.pdf என்ற இணையத்தளத்திலிருந்து வினாத்தாளைப் பதிவிறக்கம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் வாசிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இச் செயற்றிட்டத்தின் ஓரங்கமாக இந்நூல் தொகுதிகளை மாணவர்களுக்கு அதிகூடிய விலைக்கழிவில் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

248 - 1/1, காலி வீதி, கொழும்பு - 04 இல் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திலும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வடக்கு மாகாண காரியாலயத்திலும் (ஆனைப்பந்திக் குருகுலம்); நல்லூர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும்,மட்டக்களப்பு நாவற்குடா, கலாசார மண்டபத்திலும் இந் நூல் தொகுதிகள் அதிவிசேட விலைக்கழிவில் வழங்கப்பட்டுவருகின்றன. நூலறிவுப் போட்டிக்கான விடைத் தாள்களையும் இக் காரியாலயங்களில் ஒப்படைக்கலாம்.

இந்நூலறிவுப் போட்டிக்கான கால எல்லை எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவுறுகிறது. பெற்றோர்கள் வழங்கும் இத்தகைய ஊக்குவிப்பே பிள்ளைகளின் சுபீட்சமான, ஆரோக்கியமான, முழுமையான எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டும் என்பதோடு, மாணவர்கள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி பயன்பெறுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ)

## கொடியேற்றம்

பன்னாலை, ஓக. 6

பன்னாலை தெல்லிப்பழை திருவருள்மிகு வரத்தலம் கற்பக நிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும்,17 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 18 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய ஆதினகர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 12ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.




### தாள் பணிந்தால் நலம் சேரும்

வீராதி வீரன் எங்க வேலன் சில
சக்தி பாலன் - இந்த
பூவுலகை ஆளுகின்ற தங்க வேலன்
அவன் தர்மசீலன்
சூராதி சூரனை கொன்ற வேலன்
ஆறாத் துயரையும் ஆற்றி வைக்கும்
ஆறுமுகம் கொண்ட
அழகன் வேலன்...

ஏராளமாய் வரும் பக்தர்க்கெல்லாம்
எல்லையிலா அருள் வழங்கும் எழிலன் வேலன்
சூரான வேல் கொண்ட குமரன் வேலன்
சீராக்குவான் வாழ்வை - நிதமவனை
சிந்தித் திரு மனமே சிறப்புனை நாடி வரும்.....

பாரபட்சம் காட்டானாம் பரமன் பாலன் - பணக்
கார ரேழை பாராத நீதிராஜன்
ஈரமற்ற நெஞ்சினர் களான போதும் - அருள்
ஈவதிலோ ரிணை காணா ஈசன் மைந்தன்....

தொல்லை யகன் றோடும் துதிப்போர்க்கு வினையோடும்
வல்லரசு மமதை வந்த வழி யோடி விடும்
எல்லை யிலாக் கருணை மழை
யென்றுமெம் மேல் பொழியும்
நல்லைக் குமரன் தாள் பணிந்தால் நலம் சேரும்.

- புங்குடுதீவு காந்தன்

### நேர் காணும் நல்லூரான்

நாற்றிசைகளும் சூழ வலம் வர
நவ சக்திகளும் ஆசியினைப் பொழிந்திட
முக் காலமும் கூடிக் கணிந்திட
முனிவர்களும் பாடிப் பணித்திட
தேவர்களும் தேனுருகப் பாடிடவே
தேனுலகும் வாழி என வாழ்த்திடவே
இப் பூவுலகும் பூத்துக் குலுங்கிடவே
ஜீவ ராசிகளும் மறு உயிர் பெற்றிடவே
காரிருள் தந்த வானமும் கூடியே
மாரி எனும் மழையினைத் தந்திடவே
தங்க ரதமேறி தங்க வேலவனும்
நல்லையிலே பவனி வந்திட்டானே

லிங்கேஸ்வரன் ஜனார்த்தனன்
மறவன்புலோ மத்தி



## இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.6
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் ஒன்பதாவது நாளாகிய இன்று வியாழக்கிழமை இடம்பெறும் நிகழ்வில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை தலைவர் முனைவர் ஜெயலஷ்மி இராசநாயகம், இலங்கையில் மரபுவழித் தமிழ்க்கல்வி என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

## 660 பேருக்கு வாக்களிக்க தகுதி இழப்பு

பொலநறுவை, ஓக.6
நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றுவரும் நிலையில் 660 பேர் வாக்களிக்கத் தகுதி இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை, லங்காபுர சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளுடன் நெருங்கிச் செயற்பட்ட 660 பேர் தமது 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்யாமையினால் அவர்கள் வாக்களிக்கும் தகுதியை இழந்துள்ளனர் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி3)

## போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.6
பேலியகொட அதிவேக நெடுஞ் சாலை பாலம் அருகே நேற்று முன்தினம் போதைப்பொருனுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினரான கெசல்வத்த ரெய்னாவின் நெருங்கிய நண்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தக வலின் அடிப்படையிலே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார், இவரிடமிருந்து 5.1 கிராம் ஹெரோய்ன், 2 கைத்தொலைபேசிகள், 19 சிம் அட்டைகள் மற்றும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பொலிஸார் பறிமுதல்செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு 12 அக்பர் லேனில் வசித்து வந்த கெசல்வத்த தினுக என்ற 27 வயதுடைய மாற்றுத்திறனாளி என பொலிஸார் தெரி வித்துள்ளனர். சந்தேகநபரிடம் விசாரணை இடம்பெற்று வருகின்றது என வும், சந்தேகநபர் நேற்று புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்தார்எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

# நாடளாவிய ரீதியில் “வோட்ச்புல் ஐ” சிறப்பு சோதனை

**கொழும்பு, ஓக.6**
**சிறைச்சாலைகள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் சிறப்பு சோதனை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது ‘வோட்ச்புல் ஐ’ (விழித்த கண்) என்ற பெயரில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இடம்பெறும் போதைப் பொருள் கடத்தல் முயற்சிகளை கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன்படி சிறைச்சாலைக்கு உள்ளேயும், வெளியேயும் எந்தநேரமும் கண்காணிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கான ஆணையாளர் சந்தன ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார். (ரி3)

## ஐ.டி.எச். வைத்தியசாலையில் நால்வர் மட்டுமே சிகிச்சையில்

கொழும்பு, ஓக.6
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளர்களில் 4 பேர் மாத்திரமே ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஆதரவு வழங்கிய அரசாங்கம், வைத்தியர்கள் தாதிமார்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தேசிய தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். இதேவேளை, நாடு முழுவதுமாக தற்போது 299 பேர் ஐ.டி.எச் வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## மீனவர் சடலமாக மீட்பு

புத்தளம், ஓக.6
புத்தளம் களப்பு பகுதியிலிருந்து நேற்று மீனவர் ஒருவரின் சட லம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம் மணல்குன்று பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி புத்தளம் களப்பில் மீன்பிடிக்கச் சென்ற தனது தந்தை வீடு திரும்பவில்லை எனவும், தந்தையின் தெப்பம் மற்றும் தந்தை எடுத்துச் சென்ற டோர்ச் லைட் என்பன களப்பு பிரதேசத்தில் காணப்பட்டன எனவும் அவரது மகனால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், களப்பு பகுதியில் சடலமொன்று காணப்படுகின்றது என பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சென்ற புத்தளம் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (ரி1)

## மகளை கொலை செய்த தந்தைக்கு மரண தண்டனை

நுவரெலியா, ஓக.6
மகளைக் கொலை செய்த தந்தை ஒருவருக்கு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி பிரமில ரத்நாயக்க நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். நுவரெலியா ராகலை ஹல்கன்னோயாவைச் சேர்ந்த 41 வயதான சோமசுந்தரம் சுரேஷ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2014.10.24 அன்று இரவு தனது வீட்டில் மூன்றரை வயதான சுரேஷ் இந்திகா என்ற தனது மகளின் கழுத்தை நெரித்து கொலை செய்த குற்றத்திற்காக குற்றவாளிக்கு இந்த மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

குற்றவாளியின் மனைவி கடந்த 2014ஆம் ஆண்டு குவைத் நாட்டுக்கு வேலைக் குச் சென்றுள்ளார்.

அந்தப் பெண் மற்றுமொரு இலங்கை நபருடன் மறைமுக உறவை வைத்துக் கொண்டு தனது குழந்தை களைக் கவனிக்காது இருந்துள்ளார்.

அதை அடுத்தே விரக்தியில் குற்றவாளி தனது மகளின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார். இந்தக் கொலை தொடர்பாக ராகலை பொலி ஸார் நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## லஞ்சம் பெற்ற அதிகாரிக்கு இரண்டு வருட சிறை

கொழும்பு, ஓக.6
2 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்ற பொரலஸ்கமுவ பிரதேச சபையின் அலுவலக உதவியாளர் ஒருவருக்கு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர், காணியொன்றைக் கையகப்படுத்துவதற்காக கடிதமொன்றைத் தயாரித்துக் கொடுப்பதற்கு மொரட்டுவ இதிபத்தன பகுதியில் வசித்து வந்த நபரிடம் லஞ்சம் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகள் கொழும்பு உயர் நீதிமன்றில் கடந்த 28ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது அதில் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## கந்தளாயில் ஆயிரம் அரிசி பைகள் மீட்பு

திருகோணமலை, ஓக.6
திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெமுனு மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றினுள் இருந்து பத்து கிலோ கிராம் நிறைவுடைய ஆயிரம் அரிசிப் பைகள் நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றப்பட்டுள்ளன.

அவசர தொலைபேசி அழைப்புக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, இந்தப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ரி3)

## ஒரு கோடி பெறுமதியான கஞ்சா பயிர்ச்செய்கை
### இருவர் கைது

கொழும்பு, ஓக.6
கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொண்ட இரண்டு சந்தேகநபர்கள் காவல்துறை விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என காவல்துறை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹம்பேகமுல, அலுத்வெவ, கிளிம்புன்ன வனப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சூரியவெவ பகுதியில் வைத்து ரூபா ஒரு கோடி பெறுமதியான கஞ்சா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் வாழைத் தோட்டம் செய்வதாகக் கூறி இந்த கஞ்சா பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கண"டுபிடிக்கப்பட்ட கஞ்சா பயிர்செய்கை காவல்துறை விசேட அதிரடிப்படையினரால் அழிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலத்தை ஆயுர்வேத திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி3)

# வாக்குகள் எண்ணும் நிலையங்களை நோக்கி வாக்குப்பெட்டிகள்















யாழ்ப்பாணம், ஓக. 6

வடக்கில் வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் வாக்குப்பெட்டிகள் அந்தந்த மாவட்டங்களின் வாக்குகள் எண்ணும் இடங்களுக்கு நேற்றுமாலை கொண்டுசெல்லப்பட்டன. யாழ்ப்பாணத்தில் யாழ்.மத்திய கல்லூரி, மன்னாரில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, கிளிநொச்சியில் பழைய கச்சேரி வளாகம், வவுனியாவில் காமினி மகாவித்தியாலயம், முல்லைத்தீவில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி ஆகிய இடங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்பட்டிருந்தன. நெடுந்தீவிலிருந்து வாக்குப் பெட்டிகள் ஹெலிகொட்டர் மூலமாக யாழ்.மத்திய கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டிருந்தன. (த)



# வாக்களிக்கச் சென்றவர்கள் மீளத் திரும்ப படகு இல்லை

நெடுந்தீவு,ஓக.6

**நெடுந்தீவுக்கு வாக்களிக்கச் சென்ற மக்கள் மீளவும் தங்களது தற்காலிக வசிப்பிடங்களுக்குத் திரும்பிச்செல்ல முடியாமல் இறங்குதுறைமுகத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.**

நேற்றுக் காலை வாக்களிக்கச் சென்ற மக்கள் குறிகட்டுவான் துறைமுகத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக காத்திருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடும் காற்றின் மத்தியிலும் வாக்களிப்பை மேற்கொள்வதற்கு 500 இற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நெடுந்தீவுக்குச் செல்லக் காத்திருந்தனர். அங்கு அவர்களுக்கான கடற்போக்குவரத்து வசதி ஒழுங்கமைக்கப்பட்டிக்கவில்லை.

படகுச்சேவைக்கான நேர அட்டவணைகள் போடப்பட்ட போதும் அதற்குரிய ஒழுங்கமைப்பில் சேவைகள் இடம்பெறவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனினும் சேவையில் ஈடுபட்ட படகுகளில் வாக்களிக்கச் சென்ற மக்கள் மீண்டும் குறிகட்டுவான் செல்ல நெடுந்தீவு இறங்குதுறையில் காத்திருக்க வேண்டியிருந்தது. மாலை 4 மணிக்குப் பின்னரே அவர்களுக்கான படகுச் சேவைகள் ஒழுங்கமைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)



# தமிழர் வாக்குப்பலத்தால் கூட்டமைப்பு பலப்படும்

## சிவமோகன் நம்பிக்கை

முல்லைத்தீவு,ஓக.6

தமிழ் மக்கள் தங்களது வாக்குப் பலத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னிலைப்படுத்தி நாடாளுமன்றுக்கு அனுப்பி வைப்பர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சி.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவு செய்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசின் அடக்குமுறையை உடைத்தெறியும் தேர்தலாக அமைய வேண்டும். தமிழர்களைப் பொறுத்தமட்டில் ஈழ விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வை முன்னெடுப்பதற்காக உறுதியான நாடாளுமன்றத் தேர்தலை தெரிவு செய்யும் தேர்தலாக இது அமையும்.

இந்தத் தேர்தலில் ஒட்டு மொத்த மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணி திரண்டுள்ளனர் - என்றார். (க-19)

# கூட்டமைப்பின் வெற்றி உறுதி

## ரவிகரன் நம்பிக்கை

முல்லைத்தீவு,ஓக.6

இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதி என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

கள்ளப்பாடு வாக்களிப்பு நிலையத்தில், தனது வாக் கைச் செலுத்திய பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்த தாவது:

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெறும். இம்முறை அதிகளவான இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததமையை அவதானிக்க முடிகின்றது.

சில வாக்குச் சாவடிகளை அண்டிய பகுதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் ஒருவித அச்சத்துடன் காணப்பட்டனர்.

இத்தகைய அதிக பாதுகாப்பைத் தவிர்த்து, மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கலாம். இருப்பினும் எமது மக்கள் அதிகளவில் வாக்களிக்கச் செல்வார்கள் என நம்புகின்றேன் - என்றார். (சு-246)



# பழங்குடியினரின் தலைவர் மஹியங்கனையில் வாக்களிப்பு

மஹியங்கனை, ஓக.6

நாடாளுமன்றத் தேர்தலில் மஹியங்கனைதம்பான பழங்குடியினரின் தலைவர் விஸ்வ கீர்த்தி வனஸ்பதி உருவரிகே வன்னிலா அத்தான் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளார்.

மஹியங்கனை தம்பான கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள வாக்களிப்புநிலையத்துக்கு அவர் தனது மனைவி மற்றும் தனது இன மக்களுடன் நேற்றுக் காலை சென்று வாக்களித்தார்.

அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிகவும் அமைதியான முறையில் வாக்களித்து, தங்களது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றினர். (ஐ)

# வாக்களிப்பதை புகைப்படம் எடுத்தவர் கைது

கொழும்பு, ஓக. 6

வாக்களிப்பதை தனது கையடக்க தொலைபேசியில் புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்துக்கு வாக்களிக்கச் சென்ற நபரே இவ்வாறு நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தேர்தல் அலுவலர் இனங்கண்டு பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

நாவலப்பிட்டி இம்புலுபிட்டி பகுதியைச் சேர்ந்த 31வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)

# வடக்கு, கிழக்கு தமிழர் கோட்டை

## மக்கள் அதனை நிரூபிப்பர் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார்,ஓக.6

வடக்கு கிழக்கு தமிழ்த் தேசியத்தின் கோட்டை என்பதை தமிழ் மக்கள் நிரூபிப்பர் என்று வன்னியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமாகிய செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் விடத்தல்தீவில் உள்ள புனித யோசப் வாஸ் மகா வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் பெருவாரியான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீடுச் சின்னத்தை ஆதரிப்பார்கள். அந்த வகையில் கூட்டமைப்பு 5 ஆசனங்களைப் பெறும். தமிழ் மக்கள் தங்களது வாக்குரிமையை தேசியத்தின் ஊடாக வெல்ல வேண்டும், சிங்கள தேசத்துக்கு நல்ல பதிலைச் சொல்ல வேண்டும் என்பதற்காக இந்தத் தேர்தலில் முழுமையாக மக்கள் வாக்களிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் விகிதாசார அடிப்படையில் 75 வீதம் வாக்களித்தார்களோ அவ்வாறு இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். வன்னி மட்டுமல்ல வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசியத்தின் கோட்டை என்பதனை இந்தத் தேர்தலிலும் சிங்கள அரசுக்குச் சொல்ல வேண்டும் - என்றார். (க-213)

# பெரமுனவே ஆட்சியமைக்கும்!

## மஹிந்த நம்பிக்கை

கொழும்பு, ஓக. 6

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, முன்னணி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு தயாராகும் என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்றுக்காலை மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'வாக்களிப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ள மக்கள் இம்முறை வாக்களிப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கூடிய நாடாளுமன்றமொன்றை உருவாக்குவதற்கான அவசியம் காணப்படுகிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சம் மக்கள் அங்கீகரித்த சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டம் எதிர்காலத்தில் அமைக்கப்படும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும். பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்க நாம் தயார். நாங்கள் இதனைவிட எத்தனையோ சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து வாக்களிப்பதற்கு மக்களுக்கு உள்ள ஆர்வத்தைநாம்பாராட்டுகின்றோம்- என்றார்.



முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, ஷிரந்தி ராஜபக்ஷ, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதமரின் குடும்பத்தினரும், பிரதமருடன் டீ.ஏ.ராஜபக்ஷ வித்தியால யத்தில் தங்களது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். (ஐ)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது தாயாரை வாக்குப் பதிவுக்காக, நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில். உள்ள வாக்குச் சாவடிக்கு அழைத்துச் சென்றார். (க)





முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவரது பாரியார் சகிதம் நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டப வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க)




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க-40)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மாவிட்டபுரம் அமெரிக்க மிசன் பாடசாலை வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க)




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வாக்குச்சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் அ.த.க பாடசாலையில் அமைந்துள்ள வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க-214)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் புனித சவேரியான் ஆண்கள் தேசிய பாடசாலை வாக்களிப்பு நிலையத்தில் வாக்குப் பதிவு செய்தார். (க-56)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வாக்குச்சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க-26)



வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் இணுவில் மத்திய கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தார். (க)



யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வரும், வேட்பாளருமான இ.ஆனல்ட் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வாக்குச்சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க-26)




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவிட்டார். (க-110)

# வாக்குச்சாவடிகளில் வரிசையில் வாக்காளர்கள்

## யாழ்ப்பாணத்தில்...









## கிளிநொச்சியில்...







## மன்னாரில்...








## வவுனியாவில்...







# வெடிவிபத்தால் தகர்ந்தது தலைநகர் பெய்ரூட்!







பெய்ரூட், ஓக.6

லெபனான் தலைநகர் பெய்ரூட் நகரில் நேற்று இடம்பெற்ற மிகப்பெரிய வெடிவிபத்து சம்பவம் நகரையே உருக்குலைத்து, சின்னாபின்னமாக்கியுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இதுவரை 100 ஆக அதிகரித்துள்ளதுடன், மேலும் 4,000 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. வெடிவிபத்தால் பெய்ரூட் நகரிலிருந்த வீடுகள், கடைகள், மருத்துவமனைகள், நிறுவனங்கள் என அனைத்துக் கட்டடங்களும் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. பெரும் போரினால் சிதைவுற்ற நகர் போல பெய்ரூட் நகர் காட்சியளிக்கின்றது. இச்சம்பவத்தில் பெய்ரூட் நகரில் இருந்த ஒரு கோட்டை முற்றிலும் இடிந்து தரைமட்டமாகியுள்ளது. இந்த வெடிவிபத்து நில அதிர்வில் 3.5 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. மத்திய தரைக்கடல் பகுதி முழுவதும் இந்த வெடிவிபத்து சத்தம் கேட்டுள்ளது. ஏறக்குறைய 200 கி.மீ. தொலைவில் உள்ள சைப்ரஸ் நகரத்துக்கும் இந்தச் சத்தம் கேட்டு, அதிர்வு உணரப்பட்டுள்ளது. கொரோனாப் பிரச்சினை, பொருளாதாரச் சிக்கல் போன்றவற்றில் லெபனான் நாடு திண்டாடிவரும் நிலையில் இந்த வெடிவிபத்து பேரிடியாக அமைந்துள்ளது. இந்த வெடிவிபத்து நடந்தபின் ஏராளமான அம்புலன்ஸ்கள் வீதிகளிலும், வீடுகளிலும் கிடக்கும் உடல்களைக் கொண்டு சென்றவாறு இருந்தன. சிறிது நேரத்தில் வைத்தியசாலைகள் அனைத்தும் நிரம்பியதால், காயமடைந்தவர்களைச் சாலையில் வைத்து சிகிச்சையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ரி1)

## விபத்துக்கு காரணம் என்ன?

சுங்கத்தினால் கைப்பற்றப்பட்டு துறைமுக களஞ்சியசாலையில் சுமார் 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் இரசாயனம் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தமையே மிகப்பெரிய வெடிவிபத்துக்கு காரணமாக இருக்கலாம் என லெபனான் ஜனாதிபதி மைக்கல் அவுன் தெரிவித்துள்ளார். துறைமுக களஞ்சியசாலையில் உரிய பாதுகாப்புடன் இரசாயனம் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் சம்பவத்திற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். இந்த இரசாயனம் 06 வருடங்களாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், அடுத்து ஐந்து நாள்களில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்றும் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. (ரி1)


## ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று மிகப்பெரும் தீ விபத்து

டாக்கா, ஓக. 6

மத்திய கிழக்கு நாடான லெபனானில் நேற்று முன்தினம் இரவு மிகப்பெரும் வெடிப்பு இடம்பெற்று அதில் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்த நிலையில், பிறிதொரு மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று பெரும் தீ விபத்து இடம்பெற்றது.

எண்ணெய் கிணறொன்றிலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றது என்று முதல்கட்டத் தகவல் சமூக வலைத்தளங்களில் வெளிவந்தன. உயிரிழப்பு மற்றும் சேத விவரங்கள் குறித்து நேற்று நள்ளிரவு வரை எதுவும் தெரியவரவில்லை.

சுமார் 4 மணிநேரம் போராடியும் தீயணைப்பு வீரர்களால் தீயைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. (ம)



## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 05 . 1937



மறைவு
05 . 08 . 2020

### திருமதி லீலாவதி சின்னையா

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி சின்னையா நேற்று (05.08.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதிகளின் மகளும், சின்னையாவின் அன்பு மனைவியும், அற்புதநாதன், தெய்வேந்திரம், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான இராசையா, செல்வராசா, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரன், கோடீஸ்வரன், திருமதி. உ.வளர்மதி (ஆசிரியர்- யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்), காலஞ்சென்ற ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயும், திருமதி. ம.வசந்தி, திருமதி.கோ.நந்தினி, காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், தசிந்தா (இத்தாலி), சர்மிலன் (பிரான்ஸ்), தரணிகா, யதுர்சன், விதுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2020) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ஊரெழு மேற்கு.
077 822 8904

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் அல்லது கோப்பாய், நீர்வேலி, இராஜபாத வீதி, உரும்பிராய், அச்செழு ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது.

தொடர்பு:- 077 805 1655

## தேவை

மன்னார், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் கீழ்த்தளத்தில் உள்ள கடை வாடகைக்குத் தேவை.

077 266 6429, 076 700 1072

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு குளிர்பானம் தயாரிப்பவர், உணவு பரிமாறுபவர் தேவை.

[ஆண், பெண் இருபாலாரும்]

தொடர்பு:- 076 653 1918

## விற்பனைக்கு

கமுகு மடலில் செய்த

- சாப்பாட்டுத் தட்டுகள்
- சிற்றுண்டி தட்டுகள்
- கிண்ணங்கள்
- சிறு கரண்டிகள்

முற்றிலும் இயற்கையானவை. பிளாஸ்ரிக்குக்கு மாற்றானவை.

**LAVA CARE**
85, Clock Tower Road, Jaffna.
077 316 4617

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி நிமலன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 . 03 . 1975 | 19 . 07 . 2019 |

ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உமைப் பிரிந்து எண்ணி நிதம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

73, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
(J.12748) (13.17)
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 04 . 1955 | 20 . 07 . 2019 |

**அமரர் செல்லையா தவனேஸ்வரன்**
(உரிமையாளர் தபேசன் விவசாய மாளிகை - கோண்டாவில்)
**திதி: திருதியை (06.08.2020)**

*அப்பா!*
எங்களுக்காக எதையும் செய்யும் நீங்கள் ஒரே ஒருமுறை
திரும்பி வரமுடியுமா - உங்களுடன் ஆற அமர்ந்து பேச
சிரித்து மகிழ ஆயிரம் ஆசைகள் எங்களுக்கு

*அப்பா!*
நீங்கள் சொர்க்கத்தில் துயில் கொண்டாலும் எங்களை
விட்டு தூரம் போய்விடவில்லை. உங்கள் அழகிய புன்னகை
பூத்த வதனம் என்றும் எங்கள் இதயத்தில் ஆழமாக

*அப்பா!*
நீங்கள் கற்றுக் கொடுத்தது ஆயிரம் இருக்கும் போது
கற்றுக் கொடுத்ததை விட இல்லாத போது அதிகமாய்
கற்றுக் கொடுக்கும் ஞானி நீங்கள்

*அப்பா!*
சொந்தக்காலில் நின்று எங்கள் குடும்பத்தை
சுமக்கும் போது தான் தெரிகிறது. எப்போதும் எங்களை
இதயத்தில் சுமந்த நீங்கள் பட்ட வேதனை

*அப்பா!*
அந்த இறுதி நாள்களில் உடலால் பட்ட வேதனையை விட
உங்கள் உள்ளத்தால் பட்ட வேதனை அதிகமானது.
அம்மாவை நினைத்து இன்றும் உங்களை இழந்து தவிக்கும்
அம்மாவை தேற்ற முயன்று கொண்டிருக்கின்றோம்.
மீண்டும் சந்திக்கும்வரை நீங்கள் என்றும் எங்கள் இதயத்தில்

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
(J.12611) (13.17)
குடும்பத்தினர்

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Arts
## Walk- in- interview

Walk in Interview for appointments to the following posts will be held in the Mini Board Room of the Faculty of Arts, University of Jaffna on 13th August 2020.

1. **Temporary Assistant Lecturer** in Christian Civilization/Tamil / Political Science — 9.30 AM
2. **Temporary Assistant Lecturer** in Economics/Geography/Planning/ Home Economics/Hindu Civilization/Sanskrit/Hindu Philosophy — 10.00 AM
3. **Temporary Assistant Lecturer** in Archeology/History/Fine Arts/ Drama & Theatre arts /Sociology
   **Temporary Demonstrator** in Media Studies — 10.30 AM
4. **Temporary Assistant Lecturer** inPhilosophy/Psychology /Linguistics/ English LanguageTeaching / Translation Studies/ English Literature
   **Temporary Instructor** in English Language Teaching — 11.00 AM

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer**

1. A degree with specialization in the relevant subject with first or second class (upper division) Honors.

   Or

2. A degree with specialization in the relevant subject with second class (Lower division) Honors.

   Or

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other degree with at least second class Honors and
   (b) A recognized postgraduate degree in the relevant subject.

Note:- candidates who are awaiting results of the final Degree examination may also be present for the above interview.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (fixed) |
| Temporary Demonstrator | Rs. 40,920/- p.m (fixed) |
| Temporary Instructor | Rs. 40,920/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview scheduled for the above mentioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, national identity card and self prepared application.

**Registrar**
**University of Jaffna**
(IN 13372) (13.17)

## மரண அறிவித்தல்

**வைரமுத்து விஸ்வலிங்கம் (விசு அம்மான்)**
(முன்னாள் பணியாளர் – அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



அளவெட்டியை பிறப்பிடமாகவும், இல. 423, திருநகர் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து விஸ்வலிங்கம் (விசு அம்மான்) நேற்று (05.08.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கேஸ்வரியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2020) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- 077 697 6712,
077 844 5843, 077 452 8275
தகவல்: குடும்பத்தினர்.

**சேவை** நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்காமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவியரீதியில் சினேகபூர்வமான சேவை.

AAA Gold Centre 076 568 4346

## விற்பனைக்கு

நுணாவில் வீதி,
கல்வயல் பிள்ளையார் கோயில் வீதி,
$7\frac{1}{4}$ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 448 1433, 076 116 2271

# பதவி வெற்றிடம்

**யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு** கீழ் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. **முன் அனுபவமுள்ளவர்களுக்கும். சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.**

- **பெண் வரவேற்பாளர்** (மும்மொழி தெரிந்திருப்பது விரும்பத்தக்கது)
- **பெண் உதவித் தாதியர்** Nursing Assistants
- **மருந்தாளர்** (ஆண் / பெண்) Pharmacist
- **பெண் பற்சிகிச்சை உதவியாளர்** Dental Assistants

அலுவலக பணியாளர் (கணினி சம்பந்தமான அனுபவமுடையவர்கள் விரும்பத்தக்கது) 15.08.2020 திகதிக்கு முன்னதாக தொலைபேசியில் தொடர்புகொண்டு உங்கள் சுயவிவர கோவையினை அனுப்பிவைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி இல. **077 298 2233**

# கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

## மண்டலாபிடேக பூர்த்தி

காலம்

**07.08.2020 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல்**

அம்பாளுக்கு 1008 சங்காபிடேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிடேகமும் பூஜைகளும் இடம்பெற்று அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் உள் வீதி. வெளி வீதி. வலம் வருவார்.

அனைவரும் கலந்து இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**பரிபாலனசபையினர்**

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு
## கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு 2020/2021 ஆம் ஆண்டிற்குதேவையான வழங்கல்கள்/சேவைகள்

1) முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2020/2021 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

   அ. உலர் உணவு

   ஆ. வாகன டயர்கள் & பற்றறிகள்

2020 முதல் 2021 வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு வழங்கல்கள். சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனாங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணாங்கள் 06.08.2020 தொடக்கம் 20.08.2020 ஆம் திகதிவரை காலை 9.30 மணி முதல் பி.ப.3.00 மணி வரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு / தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் / சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

2) அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

3) விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான மீளளிக்கப்படாத வைப்புத்தொகை முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 21.08.2020 திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விபெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 21.08.2020 மு.ப. 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

4) ஏற்கனவே சேவையை வழங்கி வரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாக கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.

5) கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

6) மேலதிக தகவல்களை அலுவல நேரங்களில் (தொ.இல.021 229 0111, Fax : 021 2290 104 ) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

7) வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

### A) உலர் உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணை பணம் (ரூபா) |
|---|---|---|
| ஆதாரவைத்தியசாலை, மல்லாவி | 2,000.00 | 50,000.00 |
| ஆதாரவைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 2,000.00 | 50,000.00 |

### B) வாகன டயர்கள் & பற்றறிகள் வழங்கல்

| வாகன டயர்கள் அளவுகள் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | வாகன டயர்கள் அளவுகள் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 195x15 | 500.00 | 245x70xR16 | 500.00 |
| 700x16 Tyre with tube & flab | 500.00 | 205x15 | 500.00 |
| 750x16 Tyre with tube & flab | 500.00 | 215x75xR15 | 500.00 |
| 255x70xR16 | 500.00 | 8.25x20(14P) | 500.00 |
| 245x75xR16 | 500.00 | 205R16 | 500.00 |
| 255x70xR16 | 500.00 | 265X65XR17 | 500.00 |
| 265x70xR16 | 500.00 | 205R16 | 500.00 |
| 245x70xR16 Tyre with tube & flab | 500.00 | 265x65xR17 | 500.00 |
| 215xR16 | 500.00 | 90Amp Battery | 500.00 |
| 100Amp Battery | 500.00 | 120Amp Battery | 500.00 |

**வைத்திய கலாநிதி த.வினோதன்.**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

(aia 13389) (13.17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.
## வெளிவாரிப் பரீட்சைகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படுகின்ற வெளிவாரிப் பரீட்சைகள் கீழ் வரும் அட்டவணையின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

| பரீட்சையின் பெயர் | பரீட்சை நடைபெறும் காலம் | அனுமதி அட்டை விநியோகம் |
|---|---|---|
| வணிகமாணி - பகுதி -III (இறுதிச் சந்தர்ப்பம்) (பழைய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) - 2017 | 24.08.2020 - 29.08.2020 | 18.08.2020 - 21.08.2020 |
| வணிகத்தில் நான்காம் தேர்வு (இறுதிச் சந்தர்ப்பம்) - 2017 (புதிய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) | | |

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ள முடியும்.

**பதிவாளர்**
**05.08.2020**

# அறிவித்தல்



## திரு. சீவரட்ணம் சசிகுமார்

No. 60, St.Benedict Road, Nallur, Jafna

தேசிய அடையாள அட்டை இல. 763642194V கொண்ட படத்தில் காணப்படுபம் திரு. சீவரட்ணம் சசிகுமார் 31.07.2020 இலிருந்து எமது Electronic Engineering System (Pvt) Ltd சேவையில் இல்லை.

மேலும் எமது நிறுவனம் சார்பில் குறித்த திகதியிலிருந்து இவரால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கும் நாம் பொறுப்பல்ல.

**Electronic Engineering Systerms (Pvt) Ltd**
#5, Royal Pearl Gardens, Wattala.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



**அமரர் கௌரி இலட்சுமணராசா**

(ஓய்வு நிலை ஆசிரியை)

*தோற்றம்*
*24.11.1942*

*மறைவு*
*20.07.2019*

*06.08.2020 வியாழக்கிழமை*

ஆண்டுகள் பல கடந்தாலும்
அழியாது உங்கள்
நினைவுகள்

45, பரவைக்குளம் வீதி,
திருநெல்வேலி.

(ant 1160) (13.17)

**குடும்பத்தினர்**

# அயர்லாந்துக்கு ஆறுதல் இங்கிலாந்துக்கு அதிர்ச்சி

லண்டன், ஓக.6

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில், அயர்லாந்து அணி 7 இலக்குகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.



மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில், 2-1 என்ற எண்ணிக்கையில் என இங்கிலாந்து அணி தொடரை கைப்பற்றினாலும், இறுதிப்போட்டியின் வெற்றி அயர்லாந்து அணிக்கு சற்று ஆறுதலை அளித்துள்ளது.

சவுத்தாம்ப்டன் ரோஸ் பவுல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 49.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஓய்ன் மோர்கன் 106 ஓட்டங்களையும், டொம் பென்டோன் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், கிறைஜ் யங் 3 இலக்குகளையும், ஜோசுவா லிட்டில் மற்றும் கர்டிஸ் கெம்பர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், மார்க் அடாய்ர் மற்றும் கரேத் டிலேனி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

329 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து அணி, 49.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. அயர்லாந்து அணி 7 இலக்குகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

அயர்லாந்து அணி சார்பில், போல் ஸ்டெயர்லிங் 142 ஓட்டங்களையும், என்ரிவ் பால்பிரையன் 113 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், டேவிட் வில்லே மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா ஒரு இலக்கை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக போல் ஸ்டெயர்லிங் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் நாயகனாக டேவிட் வில்லே தெரிவு செய்யப்



# உலகக் கிண்ண அணியே இலக்கு

## இஷாந்த் சர்மா தெரிவிப்பு

புதுடில்லி, ஓக.6

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர் இந்திய அணியில் இணைக்கப்படாது இருக்கும் இஷாந்த் சர்மா, ஒருநாள் அணியில் இடம்பெற வேண்டும், உலகக் கிண்ண இந்திய அணியில் தாம் இடம் பிடிக்க வேண்டுமென்ற தனது விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

உலகக் கிண்ணத் தொடரில் ஆட எவருக்குத்தான் பிரியம் இருக்காது. உலகக் கிண்ணத்தை வெல்லும் அணியில் ஒரு அங்கமாக இருக்க விரும்புகிறேன். அது உண்மையில் வேறொரு உணர்வாகும். நாங்கள் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் ஆட்டத்தில் ஆடுகிறோம், இது உலகக் கிண்ணத்துக்குச் சமமானதுதான். ஆனால் நிறையப் பேர் அதைப் பின் தொடர்வதில்லை. ஆனால் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர், ரி20 உலகக் கிண்ணத் தொடர் என்பவை பெரிய அளவில் பின் தொடர்ந்து கவனிக்கப்படுகின்றன.

உண்மையைக் கூற வேண்டுமெனில், 97 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடிய பிறகும் கூட என்னால் சராசரி, ஸ்ட்ரைக் ரேட் என்பவை குறித்து புரிந்து கொள்ள முடியவில்லை. நான் இதைப்பற்றிக் கவலைப்பட்டதும் இல்லை. நான் இதனைப் புரிந்து கொள்ளவில்லை எனும்போது நான் ஏன் இதை நம்பியிருக்க வேண்டும்?. அவை வெறும் எண்கள் அவ்வளவுதான்-என்றார்.

80 ஒருநாள் ஆட்டங்களில் 115 இலக்குகளை 30.98 என்ற சராசரியிலும் 97 டெஸ்ட் ஆட்டங்களில் 297 இலக்குகளை 32.39 என்ற சராசரியிலும் இஷாந்த் சர்மா எடுத்துள்ளார். நடைபெறவுள்ள ஆஸிக்கு எதிரான தொடரில் 300 இலக்குகள் என்ற மைல்கல்லை அவர் எட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

# ரி-20 தொடரை ஒத்திவைத்தது ஆஸ்திரேலியா

சிட்னி, ஓக.6

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரானமூன்றுஆட்டங்கள்கொண்ட ரி-20 தொடரை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைகாலவரையின்றி ஒத்திவைத்தது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த இந்த தொடர் தொடர்பாக இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளுக்கிடையேயான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் ரி-20 உலகக் கிண்ண தொடருக்கு முன்னதாக நடைபெறவிருந்தது. ஆனால் தற்போது உலகக் கிண்ண தொடர் ஒத்திவைக்கப்பட்டதால், மேற்கிந்திய தீவுகள் அணியுடனான ரி-20 தொடரின் மூலம் அதிக லாபம் கிடைக்காது என நம்பப்படுகின்றது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரின் முதல் ஆட்டம் ஒக்ரோபர் 4ஆம் திகதி டவுன்ஸ்வில்லே மைதானத்திலும், இரண்டாவது ஆட்டம் 6ஆம் திகதி கெய்ன்ஸ் மைதானத்திலும், மூன்றாவது ஆட்டம் 9ஆம் திகதி கோல்ட் கோஸ்டிலும் நடைபெற இருந்தன. (எ)

# உண்மைகளை கூறியவர் டோனி

## யுவராஜ் சிங் தெரிவிப்பு



டோனிதான் 2019 ஆம் ஆண்டு எனக்கு உலகக் கிண்ணத் சமயத்தில் தெளிவான சித்திரத்தை அளித்தார் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் யுவராஜ் சிங்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவர் யுவராஜ் சிங். 2007ஆம் ஆண்டு ரி20 உலகக் கிண்ணத் தொடர், 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் என்பவற்றில் இவர் நட்சத்திரமாக உருவெடுத்தாலும், அதற்கு முன்பாக 1998 கென்யா அறிமுகத் தொடரிலேயே இவர் கிரிக்கெட்டில் தடம் பதித்தார். அதன் பின்னர் இந்திய அணிக்காகப் பல போட்டிகளை வென்று கொடுத்துள்ளார்.

ஓய்வின்போது அவருக்கு ஒரு நியாயமான, மரியாதைக்குரிய பிரியாவிடை அளிக்கப்படவில்லை என்பது தொடர்பாக ரசிகர்களிடையே பெரும் வருத்தம் இருக்கின்றது. 2019 ஆம் ஆண்டு யுவராஜ் தமது ஓய்வை அறிவித்தார், அதன் பிறகு தைரியமாக சில கருத்துகளை அவர் கூறிவருகிறார்.

இந்தநிலையில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் மீண்டும் கிரிக்கெட்டுக்கு வந்தபோது விராட் கோலி எனக்கு ஆதரவு அளித்தார், அவர் இல்லையெனில் நான் மீண்டும் வந்திருக்கவே முடியாது.

டோனிதான் 2019 ஆம் ஆண்டு எனக்கு உலகக் கிண்ணத் சமயத்தில் தெளிவான சித்திரத்தை அளித்தார். அதாவது 2019 உலகக் கிண்ணப் போட்டிக்கான வீரர்கள் தெரிவில் எனது பெயர் உள்ளடக்கப் படவில்லை, தேர்வுக் குழுவினர் எனது பெயரைப் பரிசீலிக்கவில்லை என்ற உண்மை நிலவரத்தை எனக்குத் தெரிவித்தவர் டோனிதான். 2011 உலகக் கிண்ணப் போட்டி வரை நீதான் என் முக்கிய வீரர் என்று டோனி என்னிடம் அடிக்கடி கூறுவார். நான் புற்றுநோயிலிருந்து மீண்டு வந்தபோது அணியின் அமைப்பே மாறிவிட்டிருந்தது - என்றார். (எ)

# மரியாவுக்கு அதிர்ச்சி கொடுத்து முன்னேறினார் பிளிஸ்கோவா!

ரோம், ஓக.6

மகளிர் 'ஃபெமினிலி டி பலேர்மோ' பகிரங்க சர்வதேச ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் கிறிஸ்டீனா பிளிஸ்கோவா வெற்றிபெற்றுள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில், செக் குடியரசின் கிறிஸ்டீனா பிளிஸ்கோவாவும், கிரேக்கத்தின் மரியா சக்கரியும் பலப்பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற முதல் செட்டில், ஆக்ரோஷமாக விளையாடிய கிறிஸ்டீனா பிளிஸ்கோவா, செற்றை 64 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

சமையல் ஆள் தேவை
யாழ்நகரில் இயங்கும் பிரபல
உணவகம் ஒன்றிற்கு
சமையல் கலையில் நன்கு அனுபவம்
உள்ள ஆண்/ பெண் இருபாலாரும்
தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
076 660 8223, 077 119 0011

விற்பனைக்கு நல்ல நிலையிலுள்ள
மில் மிசின் விற்பனைக்கு உண்டு.
021 228 4997, 077 312 9742, 077 594 2606

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL EXCELLENCE. SIMPLY DELIVERED.
சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.